# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2087/19 - 2018 සැප්තැම්බර් මස 04 වැනි අඟහරුවාදා - 2018.09.04

*2087/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

பணிப்புரை இல : 67

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

12 (2) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, எவரேனும் வர்த்தகர், உணவு வழங்குனர் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளை வழங்குபவர் மற்றும் / அல்லது எவரேனும் தனிநபர் / தனிநபர்கள் உணவு வழங்கும் அல்லது அதனையொத்த தொழில் / தொழில்கள் அல்லது உணவு விநியோகத்துடன் தொடர்புடைய தொழில் / தொழிற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் (SLSI) வழங்கப்படும், உணவு அல்லது அதனையொத்த சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கான சுகாதார நடைமுறைகள் தொடர்பான இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு ஒழுக்க விதிகளை (SLS 956) அடிப்படையாகக் கொண்ட நல்ல உற்பத்தி முறைகள் (GMP) சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் என பணிப்புரை விடுக்கின்றது.

வர்த்தகர்கள், உணவு வழங்குனர்கள், பதப்படுத்தப்பட்ட உணவு வழங்குனர்கள் மற்றும் எவரேனும் உணவு விநியோகத்துடன் தொடர்புபட்ட அல்லது தொடர்புடைய தொழிற்பாடுகளில் ஈடுபடுபவர்கள், அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட HACCP, FSSC 22000 அல்லது ISO 22000 சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருப்பின், இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்படும் மேற்குறித்த GMP சான்றுபடுத்தலினைப் பெற்றுக்கொள்வதில் இருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் இப் பணிப்புரை அமுல்படுத்தப்படுவதுடன், 2015 யூன் மாதம் 11 ஆம் திகதிய 1918/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பணிப்புரை இலக்கம் 56 இத்தால் நீக்கப்படுகின்றது.

இப்பணிப்புரை 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

அனுர பீ. மெத்தேகொட,
தவிசாளர்.

கொழும்பு,
2018, செத்தெம்பர் 04.

9-464


1A - PG 4202 — 207 (2018/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.